0864

# "ஞான நிட்டை"

டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன்

ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரம வெளியீடு

1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/200/864

கைதடி

## ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

# "ஞான நிட்டை"ப் பாடல்கள்

மூலமும் உரையும்

டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன்

கைதடி

30-01-1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு: இரண்டு

முதற் பதிப்பு: 30 – 01 – 1999

பதிப்பகம்: பாரதி பதிப்பகம்
430, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு: டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன்

அமைப்பு: பாரதி பதிப்பகம்

பதிப்புரிமை: ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம்
கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருபாதமே துணை

கைதடி, ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரம குருபீட முதல்வர்

சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார்

அவர்களின்

# ஆசியுரை

என் உயிருக்குயிராய் நின்று என்னை ஆளும் குருமணிக்கு இதயம் மலர்ந்த வணக்கம்.

எங்கள் குருமணியின் ஞானநிட்டைப் பாடல், அதன் மகிமையை, உள்ளீட்டின் சிறப்பை என்னவென்று என்னால் சொல்ல முடியாது. சில அன்பர்கள் அதன் பெருமையை உணர்ந்தபடியினால் அதன் வழியே பின்பற்றுகின்றார்கள். 10 வருஷமாகக் கண்டவர் வைத்திய கலாநிதி K. T. S. சபாநாதன் ஆவார்.

தித்திக்க ஊறும் சித்தமுடையார்க்கு மானுட தேகம் எடுத்த பலன் குருவின் பாதம்தான். ஞானநிட்டையின் உட்பொருளை அறிந்தால் அதுவே ஒருவர் பெற்ற பெரும் பேறு. குரு மொழிக்கு மேல் இங்கு ஒன்றும் காணவில்லை.

எனது குருமணிக்கு ஆயிரம் நமஸ்காரம் செய்து இந்த ஆசி உரையை எழுதுகின்றேன். குருமணி சச்சிதானந்தருக்கு வணக்கம் பல. யான்தேடிய செல்வம் இதுதான். சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நிற்கும் பொருள் குருமணியே.

சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார்

குருபீடம்,
ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம்,
கைதடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்
வழங்கிய

# அருளாசிச் செய்தி

சிவனேயச் செல்வர்களே!

கைதடி சச்சிதானந்த ஆசிரமத்தில் சச்சிதானந்த ஸ்வாமிகளினுடைய குருபூஜை தினத்தில் ஞானநிட்டை என்னும் நூல் வெளியிடுவதையிட்டு பெரு மனமகிழ்ச்சியடைகிறோம்.

மனிதன் மனிதனாக வாழ்வதற்கு சமய வாழ்வானது இன்றியமையாத ஒன்றாகும். சமயம் போதிக்கும் உண்மைகளை உணர்ந்து வாழ்பவன் ஞானியாகின்றான்.

இருட்டினில் இருக்கும் மனிதனை வெளிச்சத்துக்கு கொண்டு வருவது குருவினுடைய கடமையாகும்.

குரு இல்லாத மனிதனுடைய வாழ்க்கை நங்கூரம் இல்லாத கப்பல் போன்றதாகும். யாழ்ப்பாணத்துக்கு பெருமை நீண்டதொரு குருவின் பாரம்பரியம். இந்த மக்களினுடைய வாழ்வுக்கு பெரிதும் உதவியாக இருந்தது. அவ்வழியில் வந்தசுவாமி சச்சிதானந்தருடைய வழிகாட்டல் இவ்வூர் வாழ் மக்களுக்கு பெரிதும் உதவியாக அமைந்துள்ளது.

சுவாமிகளின் திருநாமத்தால் இயங்கும் இவ் ஆசிரமம் சமூகத்துக்கு வேண்டிய சேவைகளைச் செய்து கொண்டிருக்கும் இந்நேரத்தில் ஆன்மீகப் பசியில் இருக்கும் மக்களுக்கு ஞானநிட்டை என்னும் நூல் பெரு விருந்தாக அமைந்துள்ளது. ஆசிரமத்தை வழி நடாத்தும் குழந்தைவடிவேலு அவர்கட்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும், இன் நூலை வாங்கிப் படிக்கும் அன்பர்களுக்கும் திருவருளும்' குருவருளும்கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குரு மஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள்

24-12-1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர்

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

அவர்களின்

# ஆசியுரை

அருளாளர்கள் நிறைந்த புண்ணிய பூமியாக விளங்குவது கைதடி என்னும் நாமங் கொண்ட தெய்வீகப் பதியாகும். இந்த பல அருளாளர்கள் அன்றும் இன்றும் வாழ்ந்தும் வாழ்வித்தும் தெய்வீக ஒளியைப் பரப்பி வருகின்றனர். இவர்களில் இன்று நம் கண்முன் காணுகின்ற தவத்திரு சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார் குறிப்பிடததக்கவா. இவர்களுடைய ஆசிரமத்தில இரண்டு வாரங்கள துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகளும் நானும தங்கியிருந்து குருவருளின் மகத்துவத்தை உணர்ந்து கொண்டோம.

''பார்வை எனமாக்களை முன்பற்றிப் பிடித்தற்காம்
போர்வை எனக்காணார் புவி.''

என்ற திருவருட்பயன் பாடலுக்கேற்ப திருவருளின் வெளிப்பாடாக விளங்குகின்ற அம்மையாரின் தூயபணியும திரு. குழந்தைவடிவேலு அவர்களின் தன்னலங்கருதாத ஒத்துழைப்பும ஆசிரமச் சபையினரின் தெய்வீகத் தொண்டுல மேலும் மேலும வளரவேண்டும் என்று எல்லாம வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் தைமாதப் புனர்பூசத் தினத்தில் அவர்களின கைப்பட எழுதிய 'ஞானநிட்டை' என்னும் ஆத்மீகப் பாடல்கள் கருத்துரையுடன் வெளியிடப்படுவது பெரும் பாராட்டுக்குரியது.

'தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்' என்ற நிலையில் அன்றைய தினத்தில் பாடற்றொகுதி வெளிவருவது பெரிதும் வரவேற்கததக்கது. தவத்திரு செல்லம்மா அம்மையார் அவர்களையும் ஆசிரமப் பணியாளர்களையும இச்சந்தர்ப்பத்தில் வணங்கி வாழ்த்தி அமைகின்றேன.

தங்கம்மா அப்பாக்குட்டி

தெல்லிப்பழை,
ஸ்ரீ லங்கா.

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமத் தலைவர்

ஆத்மீகச் செம்மல் சமாதான நீதவான்

திரு. இ. குழந்தைவடிவேலு

அவர்கள் வழங்கிய

# பதிப்புரை

''கோடிமக்கள் உனை அறியும் காலம் வரும்''

இது மகாதேவாசுவாமிகள் ஸ்ரீசச்சிதானந்தசுவாமிகளுக்குக் கூறியது. இந்த வாசகத்தை நிலைநாட்ட எனது மனம் வாக்கு, காயம் ஆகியவற்றை சுவாமிகளுக்கே சமர்ப்பித்துவிட்டேன். அவர் காலடிபட்ட கைதடிமண் ஒரு புனித பூமியாகவும், அவர் வாழ்ந்த தவக்குடிசை ஆசிரமமாகவும் அவர் தியானித்த ஒரு சிறு ஒதுக்குப்புறம் தியான மண்டபமாகவும், அவர் உலாவிய இடம் ஒரு திருநந்தவனமாகவும் ஆவதற்காக குருவருள் அடியேனுக்கு தவத்திருசுவாமி செல்லம்மா அம்மையாரூடே துணைநின்றது.

இருப்பினும் சுவாமிகளினுடைய வாழ்க்கை வரலாற்றையும், அவரால் இயற்றப்பெற்ற பாடல்களையும் கோடிமக்களும் அறிந்து கொள்ளவேண்டும் என்று என்னுள்ளத்தில் தணியாத தாகமாக இருந்தது. சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை வித்துவான் க. கமாட்சிசுந்தரம் எழுதி எனது தாகத்தின் ஒரு பகுதியைத்தீர்த்துள்ளார். இப்பொழுது சுவாமிகளால் இயற்றப்பெற்ற ஞானநிட்டைப் பாடலின் பொழிப்புரையையும் விளக்கவுரையையும் கொண்ட நூலை டாக்டர் K. T. S. சபாநாதன் எழுதுவதன் மூலம் எனது தாகம் தணிந்தது என்று கூறுவதில் பெருமிதங்கொள்கிறேன்.

நூலாசிரியர்கடந்த பதினைந்து ஆண்டுகளாக எமது ஆசிரமத்தோடு பின்னிப் பிணைந்தவர். சுவாமி செல்லம்மா அம்மையாரைத் தாய்போல் நேசிப்பவர். எனது குருநாதரைத் தனது குருவாகவும் ஏற்றுக் கொண்டவர். எல்லாவற்றுக்கும் மேலாக எனது பேரன்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரியவர். எமது ஆசிரமத்தில் ஆரம்பகால நிர்வாக அங்கத்தினராக இருந்தவர். அப்படிப்பட்ட டாக்டர் K. T. S. S. இன் ஆக்கமே இன்று உங்கள் கைகளில் தவழும் 'ஞானநிட்டை'.

ஆசிரியர் சுவாமிகளின் பாடல்களுக்கான உரையை உயர்ந்த எல்லாம் கடந்த ஞான நிலையிலிருந்தே எழுதியுள்ளார் போலத் தோன்றுகிறது. எல்லோருக்கும் விளங்கும் வகையில் இலகு தமிழில் எழுத்தாற்றலைத் தந்திருக்கின்ற ஆசிரியரின் எழுத்துப்பணி சிறக்கவும், ஆசிரமப்பணி தொடரவும் சுவாமி ஸ்ரீ சச்சிதானந்தரை வேண்டிப் பணிகின்றேன்.

ஆசிரம பணிகளில், 1993 ஆம் ஆண்டு முதல் அரும் பணியாற்றி வருபவர் திரு. த. குகனேசன். இவர், யாழ் நகரின் பிரபல வர்த்தகர் என்பதை விட சுவாமிகள் மீது அதித பக்தி உடையவர் என்று கூறுதலே மாண்புறு சிறப்புடைத்தாகும். இன்று "ஞானநிட்டை" உருப்பெறுகின்றது என்றால் அது அன்பர் குகநேசன் அவர்களின் உளம் கோண அன்பளிப்பின் பிரதிபலிப்பே யாகும். அன்பர் குகநேசன் அவர்களின் அருட்கொடை மேலும் சிறக்க வாழ்த்தி விளைகின்றேன்.

இ. குழந்தைவடிவேலு J. P.
தலைவர்,
கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

''கண்ணினில் ஒளியேயன்றி வேறொரு ஒளியுமில்லை'' என்பது அன்னைத்தமிழ் வளர்த்த ஔவையின் அமுதமொழி அந்த ஒளியானது புறஒளியோடு கலந்து அத்துவிதப்பட்டாலன்றி (இரண்டு அற்ற ஒருநிலை) எதனையும் காண இயலாது. அதுபோலவே உயிரறிவு உயிருக்குயிரான இறையொளியோடு இரண்டறக் கலந்தாலன்றி எதையும் அறியாது இவ்விரண்டறக்கலப்புக்குத் தடையாக இருக்கும் இருள் ''ஆணவம்'' இவ் இருளை அகற்றிக் காண்பதே ஆனந்தத் திருக்காட்சி, இதனாற்தான் மணிவாசகர் இறைவனை ''நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன்'' எனக்குறிப்பிடுகின்றார். இவ்வாறு உயிரானது ஆணவத்தோடு கலந்திருப்பது அநாதியான நிலையென்று சைவசித்தாந்தம் பேசுகின்றது. யோகிகளும், ஞானிகளும் தங்கள் தர்சனங்களால் அந்நிலைகளை மாற்றியுள்ளனர். அனாதியான இருளை அகற்ற ஏற்றவேண்டிய ஒளியே ஞான ஒளி.

ஞானம் என்ற சொல்லின் பொருளைப் பெறுவது மிகக்கடினம் 'க்ஞா' என்பது அறிதலாகும். 'ன' என்பது அறிய இயலாதது. அறியமுடியாதது எதுவோ அதுவே ஞானமாகும். யாரும் இதை இனங்கண்டுகொள்ள முடியாது. அத்வைத தர்சனமே (ஒருமையாகக்காண்பது) ஞானமாகும். இரண்டாவது என்பதே இல்லை .எதையும் அறிய இயலாது அறியவேண்டுவது எதுவும் இல்லை அறிபவன், அறியப்படுபவன், அறிவு என்பவை இல்லை தெய்வதத்துவத்தை உணர்வதற்கு பல்வகையில் ஒருமையைக் காணவேண்டும்.

ஆகவே ஒவ்வொருவரும் தமக்குள் இருக்கும் தெய்வீகக் கோட்பாட்டைப்புரிந்து கொள்ள முயற்சி செய்யவேண்டும். கடவுள் ஒருவரே. ஒருகடவுளே எல்லா சீவராசிகளுக்கும் இருக்கிறார். கடவுளைச் சிறு பகுதிகளாகப் பிரிக்கமுடியுமா? ஒரேகடவுள் எல்லோருள்ளும் பிளவுபடாது முழுமையாகப் பிரகாசிக்கிறார். அறியாமையினால்தான் பலவகையிலிருப்பதாக மனிதன் நினைக்கிறான். கடலில் நீர் இருக்கிறது. கடல்நீரில் சூரியன் பிரகாசிப்பதாகத் தோன்றுகிறது. பானைநீரிலும் கதிரவன் ஒளிவிடுவதாகத் தோன்றுகிறது. ஏரிநீரிலும் கதிரவன் பிரகாசிப்பதாகத் தோன்றுகிறது. கடல், நதி, வளி, பானை, கிணறு இவற்றில் காணப்படும் சூரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அவ்வளவு பேர் உண்டா? கடல், நதி, கிணறு, ஏரி, பானை ஒவ்வொன்றும் வெவ்வேறானது. இருந்தாலும் ஒரே சூரியன் பிரதி பிம்பமாக முழுமையாகப் பிரகாசிக்கின்றது அதேபோல ஆத்மாவும் எல்லா உயிர்களிலும், எல்லாவற்றிலும் முழுமையாகப்பிரகாசிக் கிறது. நாமரூபங்கள வேறானாலும் ஒரே தெய்வீக ஒளிவீசுகிறது. இத்தெய்வீகக்கோட்பாட்டை அறிவதற்கு முதலில் விருப்பு, வெறுப்பு பயம் இவற்றை விலக்கவேண்டும். இம்மூன்றும் உலகியல்பாற்பட்டது இவற்றை நீக்குவதற்கு ஒரு திறவுகோலாக அமைந்ததே ''ஞான நிட்டை'' என்றால் மிகையாகாது.

மன இருள் அகற்றி மாசற்ற சோதியைக் காண்பதற்காய் தந்த பாசுரஙகளே ஞானநிட்டை. இதனைத் தந்தருளியவர் கைதடியூர் ஸ்ரீ சச்சிதாலநத சுவாமிகள். தான் கண்டு அனுபவித்த ஞானரசத்தை அனைவருமபருகிததிழைக்க வேணடும் என்று சுவாமிகளும், அவா வழி வந்த தவத்திரு செல்லம்மா அம்மையார், ஆன்மீகச் செம்மல் குழந்தைவடிவேலு ஆகியோரின் பேரார்வம், அதற்காக சுவாமி ஸ்ரீ சச்சிதானந்தருடைய வாழ்க்கை வரலாற்றை வித்துவான் க. காமாட்சிசுந்தரம் அவர்களும் சுவாமிகளது ஞானநிட்டைப் பாட லுக்கான விளக்கவுரையை அடியேனும் எழுதுவதற்கு வாய்ப்புக் கிட்டியது.

சுவாமிகளது பாடல்களில் காணப்படும் ஞானமார்க்கம் என்பது எல்லாக்கலைஞானங்கள், புராணங்கள், வேதாகமங்கள், சமய சாஸ் திரங்கள் யாவையும் ஆராய்ந்து எப்பொருளும் கீழெனக்கண்டு பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களையும் உணர்ந்து அம் மூன்றிலும் பதிப்பொருளே பசுபாசங்களுக்குமேலானது என்பதை அறிந்து நல் வழிக்கு ஏதுவான ஞான நூல்கள் ஓதல், கேட்டலுடன் சிந்தித்து அகத்தாலும் புறத்தாலும் வழிபடும் முறைகள் இல்லாத அறிவு மார்க்கத்தினாலே சச்சிதானந்தப் பிழம்பாய் விளங்குகிற ஞானத தினை அனுட்டித்தோர் சிவசாயுச்சியம் ஆகிய பரமுத்தியைப் பெறுவர். இந்நிலை அடைந்து 'எங்கும் பிரம்மம்', 'எதிலும் பிரம்மம்' 'சொல்லும பிரம்மம்', 'செயலும் பிரம்மம்' என்கின்ற நிலையை கிடைத்தற்கரிய மானிடப்பிறவியிலே காலம் வரும்வரை காத்திராது இன்றே அதனைக காண அனுபவிக்க ஏற்ற பாடல்களை விளக்கு வதற்கு வாய்ப்புத்தந்த ஸ்ரீ சச்சிதானநத சுவாமிகளுக்கே இந் நூலினை சமர்ப்பணம் செய்கிறேன.

ஞானநிட்டைப் பாடலுக்கான பொழிப்புரை தந்துதவிய எனது கவிஞானக்குரு நயினைக்கவிஞர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு நன்றிகூறுவதுடன் ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளுடைய திவ்விய கடாட்சம் கிடைக்க குருவருளை வேண்டுகிறேன். இச்சிறிய ஆக்கத்திற்கு அருளாசிச் செய்திவழங்கிய நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்தபிரமசார்ய சுவாமிகளுக்கு எனது பணிவான நன்றிகள். ஆசியுரை வழங்கி இப்புத்தகத்தின் மதிப்பை உயர்த்திய கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு நன்றி கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எல்லாவற்றிற்கும் மேலாக எனது மதிப்புக்குரிய பேராசான் திரு. ப. கோபால கிருஷ்ண ஐயர் அவர்களின் பதிப்புரை மென்மேலும் எனது எழுத்தாற்றலைத் தூண்டும் என்பதில் ஐயமில்லை. அவருக்கு எனது பணிவான நன்றிகள். இந்நூல் வெளிவருவதற்கு பேருதவிபுரிந்த பெருந்தகை திரு. த. குகநேசன் அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும். ஆசிரமபீடாதிபதி சுவாமி சச்சிதானந்த செல்லம்மா அம்மையார், ஆசிரமத்தலைவர் திரு. குழந்தை வடிவேலு J. P. வாழ்த்துரை வழங்கிய எனது பெருமதிற்பிற்குரிய பேராசிரியர் சு. பவானி அவர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றிகள் உரித்தாகுக.

இவ் ஆக்கத்திற்கு செய்நிட்ட உதவிக்கு வார்த்தைகள் இல்லை. அறிவிற் சிறியோனாகிய யான் ஞானச்சுரங்கத்தைத் தோண்ட முற்பட்டேன். தடைகளைத்தாண்டும போது தவறுகள் எழக்கூடும். இவ்வாறு ஏற்படும் தவறுகளுக்காக என்னை மன்னித்துக் குறை நிறைகளை எடுத்தியம்பி வழிகாட்டுமாறு சைவப்பெரியார்களிடம் கோரி மெய்யன்பர்களின் திருக்கரங்களில் இதனைச் சமர்ப்பிக்கிறேன்.

உரிய காலத்தில் நூலினை அழகுடன் அச்சேற்றித்தந்த பாரதி பதிப்பகத்தாருக்கு என் இனிய நன்றிகள் உரித்தாகுக.

"கோமுகி" குருபாதத்தின் கீழ்
கைதடி. சோ. சபாநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர்*

## பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் அவர்கள்

*வழங்கிய*

# மதிப்புரை

யாழ்ப்பாணத்தில் ஞானநிட்டை கூடிய ஆத்மீக வள்ளல்களின் மரபு ஒன்று சிறப்படைந்து வருகின்றது. இம்மரபினை வளர்த்தெடுக்கும் ஆத்மீக வள்ளல்கள் வாழ்ந்த ஊர்களின் வரிசையில் கைதடியும் இடம்பெறுகின்றது. அங்கு ஆத்மீக வாழ்வு வாழ்ந்து ஞானஒளி பரப்பியவரே தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள். மானிடப் பிறவியின் நோக்கம இறைவனைப் பணிந்து பிறவியை வேரறுப்பதோடும் பந்தபாசங்களிலிருந்து விடுதலை பெறுவதே. வீடு என்ற நிலையில் நின்று ஆத்மசாதகனுக்கு விடுதலைக்கான வழியைக் காட்டியவர் சற்குரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள். அவர் குருமூர்த்தமாக எழுந்தருளியிருந்த ஆச்சிரமத்தில் அவர் வழிவந்த நற்சீடர்கள் சேவை செய்து வருகின்றனர். அவர்களுள் சுவாமி சச்சிதானந்தா செல்லம்மா அம்மையார், ஆச்சிரமத்தலைவர் ஆன்மீகச் செம்மல் திரு. இ. குழந்தைவடிவேலு போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். ஞானநிட்டைப்பாடல்களுக்கு விளக்கவுரை எழுதியவராகிய டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன் அவர்களும் சுவாமிமீது குருபக்தியும் அபிமானமும் கொண்டவர்.

இத்தகைய சிறந்த ஞானியாகிய ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் மனித மேம்பாட்டிற்கு அருளிய சிந்தனைக்கருவூலமே ஞானநிட்டை. 1993 ஆம் ஆண்டு கைதடி ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம் வெளியிட்ட சுவாமிகளின் வரலாறு கூறும் நூலில் ஞானநிட்டைப் பாடல்கள் பிரசுரமாகியுள்ளன. அவை அத்வைத ஞானவழிப் பாடல்கள் வரிசையில் இடம்பெற்றுள்ளன. சுவாமிகளின ஆக்கமாகிய இப்பாடல்களுக்கு பொழிப்புரையும் விளக்கவுரையும் எழுதி வெளியிட ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம் முன்வந்துள்ளமை தவப்பேறாகும். சுவாமிகளின் சிந்தனைகள் ஆத்மீக வாழ்வுக்கு வழிகாட்டுபவை.

அப்பாடல்களின் பெருமையை உணர்ந்த நிலையில் எமது அன்புக்குரிய டாக்டர் கே. ரி. எஸ். சபாநாதன் அவர்கள் அவற்றுக்கு ஏற்றதொரு விளக்கவுரையினை எழுத முனைந்துள்ளமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் பாராட்டப்பட வேண்டிய முயற்சியாகும். சுவாமிகளின் ஞானச் சிந்தனைகள் மக்கள் மத்தியில் பரவ இவ்விளக்கவுரை உதவும். ஞானநிட்டைப் பாடல்களை யாவரும் எளிதில் விளக்கக் கூடிய வாய்ப்பு இவ்விளக்கவுரையின் மூலம் கிட்டியுள்ளது. டாக்டர் சபாநாதன் யோகசூத்திரத்தை அடிப்படையாகக்கொண்டு யோக நெறிபற்றிய உயர்மட்ட ஆய்வினை மேற்கொண்டிருப்பவர். எனவே சுவாமிகளின் ஞானநிட்டைப் பாடல்களை விளக்கக்கூடிய தகுதி அவருக்குண்டு. அத்துடன் மருத்துவக் கலையின் வளர்ச்சிக்கு ஆத்மீக சிந்தனைகளின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்தவர் டாக்டர் சபாநாதன். தமது ஆற்றலுக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற வகையில் பல உபகதைகளின் துணைகொண்டு இப்பாடல்களுக்குரிய விளக்கங் களைத் தரமுற்பட்டுள்ளார். பல நூல்களிலிருந்து பெற்ற கருத்து களும் அவரது விளக்கவுரையில் இழையோடியுள்ளன. அருட்தாகம் மிக்கவர்களுக்கு ஞானநிட்டை கைகூடும் என்ற விளக்கம தரப்பட் டுள்ளது.

டாக்டர் சபாநாதன் சிறந்த சிந்தனையாளர். எடுத்துக்கொண்ட பொருளை அழுகதந்திருத்தமாகக் கூறும் ஆற்றல் படைத்தவர். தமது மருத்துவப் பணிகளுக்கு மத்தியில இத்தகைய ஆத்மீக பணி களின் மூலம் மனநிறைவும் இன்பமும் அடைபவர். சுவாமியின் குரு வருளைப போற்றுபவர். எனவே இப்பாடல்களுக்கு விளக்கவுரை எழுத குருவருளும திருவருளும அவருக்கு வாய்த்துள்ளன.

இந்த ஞான நூல ஆஸ்திகர்களுககு நல்லதொரு வரப்பிரசாதம். திருவருட் தியானம், மனம வீணான போக்கில செல்லாதிருப்பதற்கான அறிவுரைகள், ஐம்புலன் ஒடுக்கம், யோகசாதனை, ஆன்மபோதம், குருஉபதேசம, அறியாமை நீக்கம, உலகநிலையாமை, ஆத்ம தரிசனம், மோனநிலை போன்ற விழுமியங்களே ஞானநிட்டையின் அடிப் படைகள். இவற்றை தமது விளக்கவுரையில எளிமையான நடையில டாக்டர் சபாநாதன விளககியுள்ளார்.

தவத்திரு ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின் ஞானநிட்டை பற்றிய சிந்தனைகள் உலகில் பரவுவதற்கு வழிவகுக்கும் இவ்விளக்க நூலை எழுதிய டாக்டர் சபாநாதனுக்கு குருவருளும் திருவருளும் பொலிவ தாகுக. இந்நூலை சமய விளக்கம் நாடுபவர்கள் மனமுவந்து வரவேற்பர் என்பதில் ஐயமில்லை. டாக்டர் சபாநாதனின் இம் முயற்சிக்காக அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இது போன்ற பணிகளில் அவர் மேலும் ஈடுபட குருவருள் துணை நிற்பதாகுக.

வெகுதானிய ஸு மார்கழி - 9
திருவெம்பாவை ஆரம்பநாள்
24-12-1998

ப. கோபாலகிருஷ்ணன்
இந்துநாகரிகத் துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட - கிழக்கு மாகாணசபை சுதேச வைத்திய
அமைச்சின் பணிப்பாளர்
பேராசிரியர் சுப்பிரமணியம் பவானி
அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

''வைத்திய கலாநிதி சோ. சபாநாதன் வைத்திய மாணவனாக இருநத காலத்திலும், வைத்தியராக பணிபுரியும் காலத திலும் வைத்தியத்துறையுடன் மட்டும் தனது செயற்பாட்டை மட்டுப்படுத்திய ஒருவராகக் காணப்படவில்லை. சைவம், தமிழ், பொது மக்கள் சேவை என்பவற்றிற்காக தனது சேவையை விரிவாக்கி செயற்படுததினார். சைவசித்தாந்தம் எமது வைத்தியத்துறையுடன் இணைந்துள்ளது. யோக சாஸ்திரமும அது போன்றதே.

அநத வரிசையில் ''ஞானநிட்டை'' என்ற நூலிற்கு பொழிப்புரை, விளக்கவுரை எழுதவேணடும் எனற ஆர்வம் அவருக்கேற்பட்டது மிகவும் பொருத்தமானதொன்று என்பது எலலோராலும ஏற்றுக்கொள்ளக்கூடியதொன்றாகும். பண்டைய இலக்கிய, சமய நூல்களில் காணப்படும் பாடலகளுக்கு சரியான விளக்கத்தை பெறுவதறகு எல்லாரும் தகுதி பெற்று விடமுடியாது. இந்த துறையில் ஈடுபாடும் அனுபவமும் மிக்கவர்கள் தான் அதன் விளக்கத்தை எடுத்து கூறுவது பொருத்தமானது.

வைத்திய கலாநிதி சோ. சபாநாதன் அவர்களின் முயற்சி வைத்தியர்களுக்கும், இலக்கிய, சமய சம்பந்தமான ஆர்வமுள்ளவர்களுக்கும் சிறந்த பலனை அளிக்கும் எனபதில் இரு கருத்துக்கள் இருகக முடியாது.

அவரது இந்த கன்னிமுயற்சி சகல வழிகளிலும் அவருக்கு ஒரு உந்து சக்தியையும, வெற்றியையும் அளிக்க வேணடுமென வாழ்த்தி எலலாம்வல்ல நயினை நாகபூஷணி அம்பாளின் அருளுடன் ஞானநிட்டையின் விளக்கம் மககளுக்கு பயன் படவேண்டுமெனவும் பிரார்த்திக்கினறேன்.

சு. பவானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

| | | |
|---|---|---|
| 1. | யோகதரிசனத்தில் ஞானநிட்டை | 01 |
| 2. | மன ஒருமைப்பாட்டில் ஞானநிட்டை | 03 |
| 3. | ஞானநிட்டை பயிலும் இடம் | 05 |
| 4. | அறியாமை அகற்றுவதில் ஞானநிட்டை | 08 |
| 5. | குரு உபதேசத்தில் ஞானநிட்டை | 10 |
| 6. | மனம் லயிக்கும் இடம் அறிய ஞானநிட்டை | 12 |
| 7. | மாயை அகற்றுவதில் ஞானநிட்டை | 14 |
| 8. | உபநிடத மகாவாக்கியத்தில் ஞானநிட்டை | 16 |
| 9. | ஆப்த வாக்கியத்தில் ஞானநிட்டை | 20 |
| 10. | அத்வைதத்தில் ஞானநிட்டை | 22 |
| 11. | உசாவு துணை நூல்கள் | 24 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. யோக தரிசனத்தில் ஞான நிட்டை

தக்கசா தனத்திருந்து குருபரன் தாளை நோக்கி
மிக்கவெண் ணீற்றையள்ளி உடம்பினிற் தரித்து நன்கு
சிக்கிய மனத்தை நீக்கி நின்மலப் பிரமந்தன்னில்
சொக்கியே நிற்பதன்றோ நல்லருள் ஞானநிட்டை

**பொழிப்புரை:-**

பொருத்தமான இடத்தில் பொருத்தமான பயிற்சியுடன் இருந்து. குருநாதர்களில் சிறந்தவருடைய திருப்பாதங்களை நினைந்து அல்லது நோக்கியவாறு, பெருமைமிக்க வெண்ணீற்றை (விபூதியை) அள்ளி உடம்பிலே தரித்து, பந்தபாசங்களில சிககித்தவிக்கும் மன இறுக்கங்களைத் தளர்த்தி மாசற்ற அல்லது மலபந்தம் விடுபட்ட முழு முதற் பொருளிலே திழைத்து நிற்பதன்றோ ஞானநிட்டை அல்லது திருவருட் தியானமாகும்.

**விளக்கவுரை:-**

பொருத்தமான இடத்தில் பொருத்தமான பயிற்சியிருந்து என்று குறிப்பிடுவது இந்து சாதனங்களில் ஒருபிரிவான யோக சாதனம என்றும் கொள்ளலாம். "யோகம்" என்பது இணைதல் என்ற பொருள்படினும் யோகமதத்தினர் "விடுதலை" என்றே யோகத்திற்குப் பொருள் தருகின்றார். விடுதலை என்பது ஆத்மா பிரகிருதிக சேர்க்கையிலிருந்து, ஆத்மா விடுதலையடைதல் என்பதையே குறிக்கிறது. இம்மார்க்கத்தில் எட்டுப்படிகள் உண்டு. இவை உடல், உள ஒழுக்கத்தின்பாற்பட்டது. அவையாவன இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம் தாரணை, தியானம், சமாதி என்பவைகளாகும். இவ்வெட்டுப்படிகளை எவன் கடக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறானோ அவன் ஞானத்தை உணர்ந்தவனாகின்றான். அதாவது ஆனந்தத்தேனைப் பருகியவனாகின்றான். இவ்வெட்டுப்படிகளிலும் மனதை ஒருமுகப்படுத்துவதற்கான வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. மனதில் ஏற்படும் விருத்திகளை அடக்குதலே யோகம் என்று பதஞ்சலி மகரிஷியும் கூறியுள்ளார். இவ்வாறு மனதை அடக்கி விடுதலையடையும் மார்க்கத்தையே சச்சிதானந்த சுவாமிகளும் கூறுகிறார்.

ஒருமுறை சுவாமிகள் அவருடைய மாணாக்கர் வைத்தியகலாநிதி சின்னப்புவிற்கு உபதேசித்துக் கொண்டிருக்கையில் ''கார் ஓடிக் கொண்டிருக்கும் போது அதை நிற்பாட்ட வேண்டுமானால் கதவைத் திறந்து ஓடும் சில்லை, அல்லது வேறேதாவது பகுதியை பிடித்திழுத்து நிற்பாட்ட முடியுமா? காலிற்கு கீழ் இருக்கும் பிறேக்கைப் பிடிக்க கார் நிற்குதல்லவா? அதேபோல மனதை எழும்பவிட்டுப் பின்பு அடக்குவதிலும்பார்க்க அது எழும்ப முதலே உள்ளே அடக்கிவிடுதல் சுலபம்'' என்று கூறினார்.

மனமானது ஒரு - நிலைப்படும்போது மூலாதாரத்தில் உள்ள குண்டலினிசக்தி மேலெழும். அப்பொழுது உடல் வெப்பநிலை அதிகரிக்கும். இதனைத் தணிப்பதற்கு உபாயம் என்ன என்று சிந்தித்த சுவாமிகள் சிவசின்னமாகிய திருநீற்றை மேனியிற் பூசினால் வெப்பம் தணியும் என்பதைச் சுட்டிககாட்டுகிறார். திருஞானசம்பந்தர் பாண்டிய மன்னனுடைய வெப்பு நோயை திருநீற்றுப் பதிகம்பாடித் தீர்த்து வைத்தது இங்கு நோக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. மன ஒருமைப்பாட்டில் ஞான நிட்டை

மனத்தினை விடயபாதை சென்றிடா தடக்கித்
தினைப்பொழு தாயின் வாசனை வழிவிடாது
அனைத்துமாய் நிற்கும்ஞானதற்பர நிலையில் நின்று
வனப்பெரு மாய்கை தன்னை நீப்பது ஞானநிட்டை

பொழிப்புரை:-

மனத்தைப் பிறவிடயங்கள் மேல் செல்லாது அடக்கி தினைப் பொழுதிலாவது உலக இன்பங்களில் செல்லவிடாது எல்லாமாக நிற்கும திருவருள் கூட்டும் மேம்பட்ட நிலையில் நின்று எம்மை மாய்க்கும் துன்பத்தை நீக்குவதே ஞானநிட்டையாகும.

விளக்கவுரை:-

"மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்பது ஔவைத்தமிழ். ஐம்புலன்களை ஒடுக்குதல் ஞானநிட்டைக்கு அவசிய மானது.

"ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார் கோமான்
இந்திரனே சாலுங் கரி"

என்பது வள்ளுவர் வாக்கு. புலன் அடக்கம் எவ்வளவு முக்கிய மானது என்பதை சுவாமி விவேகானந்தர் கூறும்போது "ஒரு பெரிய அரசனுக்கு ஒரு மந்திரி இருந்தான். அந்தமந்திரி ஒரு குற்றம் செய் ததனால் அரசன் அவனை ஒரு உயர்ந்த கோபுரத்தின் அறை ஒன்றிற்குள் அடைத்துச் சிறைவைத்துவிட்டான். மந்திரியின் மனைவி மிகவும் உத்தமி. அவள் இரவில் கோபுரத்தின் அடியில் வந்து நின்று கொண்டு கணவன் இருக்கும் அறையை நோக்கி கைகூப்பித் தொழுவ துண்டு. அவளுக்கு மந்திரி புலப்படமாட்டார். ஆனால் மந்திரி இதைக் கவனிக்கமுடிந்தது. அதனால் ஒரு துண்டுக் குறிப்பை எழுதி கல்லைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிக் கீழேபோட்டுவிட்டான். அதில் 'நாளை இரவு நீ வரும் பொழுது நீண்ட தடித்த கயிறு ஒன்றும், நூல்முடிஒன்றும், தேன் கொஞ்சமும் கொண்டு வருவாயாக வண்டின் உடலில் பட்டுநூலைக் கட்டி, அதன் தலையில் ஒரு துளி தேனைப்பூசி நேராகவை'' என்று குறித்திருந்தார். மறுநாள் அதுபோலவே மந்திரியின் மனைவி வைத் திருக்கவே வண்டானது தேனின் மணத்தால் கவரப்பட்டு மேல் நோக்கி நகர்ந்து போயிற்று. மந்திரி வண்டின்மீது சுற்றப்பட்டிருந்த பட்டு நூலைப் பற்றி, நூலின் மறு முனையில் சணற் கயிற்றையும், அதன்நுனியில் பெரிய கயிற்றையும் கட்டிவிடச் சொன்னார். அப்ப டிச்செய்ததும் மந்திரி பட்டு நூலிலிருந்து சணற்கயிற்றையும், அதி லிருந்து பெருங்கயிற்றையும் பிடித்துக்கொண்டான். பெருங்கயிற்றை அந்த அறையின கம்பியில் கட்டிவிட்டு அதைப் பிடித்துக்கொணடு கீழ் இறங்கிவிட்டான். அவ்விதம அவன் தப்பி ஓடமுடிந்தது.

பட்டுநூலால் எப்படித் தப்பிச் செல்ல முடியும்? அதுமிகமென் மையானது அல்லவா? அதைப்போல பட்டு நூலைப்போன்ற சுவா சதது இயக்கததின் மூலம் நாடிகளாகிய நூல் முடியைப் பற்ற லாம். அவற்றின் மூலமாக சணல்கயிறாகிய எண்ணங்களைப்பற்றி அதன் மூலம் பிராணனாகிய பெருங்கயிற்றைப்பிடிக்கலாம். அதைப் பயன்படுத்தி ஆன்மவிடுதலையடையலாம. மந்திரி மனதினைக் குறிப் பிட்ட விடயத்தில் மட்டும் நிறுத்தியதாலும், வேறுவிடயங்களில் புலன்வழி செல்லவிடாதிருந்ததாலும் வெற்றி கண்டது போல, தினைப் பொழுது தன்னும் உலக நாட்டம் இல்லாதிருந்ததனால் விடுதலை அடைந்தான். அருணகிரிநாதரும் அரைநிமிடமாவது உலக இன்பம் தவிர்த்து இறை தியானம் செய்யும்படி வேண்டுவது கவனிக்கத்தக்கது.

எதற்காக ஒருமைப்பட்ட மனம் வேண்டுமென்றால் உடலானது ஒரு பௌதீகப் பொருளாகும், அதுபல பொருள்களின் கூட்டுக்கலவை. உடலின் மேற்புறம் புலன்கள், புலன்களின் மேற்புறம் மனம், மனதின் மேல் புத்தி, புத்தியின் மேல் ஆத்மா, ஆத்மாவிலிருந்து நேரடியான இணைப்பு புத்தியிடம் தானிருக்கிறது. ஆன்மாவின் ஒளி புத்தியிடம் படருவதால் நம்புத்தியை நல்ல முறையில் வளர்த்துக்கொள்ள வேண்டும். நல்ல புத்தியுடையவரே ஞானியாக முடியும். அதன் மூலமே ஞானத்தை முழுமையாகப் பெறமுடியும். அதற்கான வழி காட்டியாக அமைந்ததே ஞானநிட்டையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. ஞான நிட்டை பயிலும் இடம்

தனித்து வேதாந்த விடத்தினிற் சென்று
மனத்தினைப் பொறிவழி செல்லா தடக்கி
நினைப்பெனு மாசையால் காற்றை விடுத்து
வனப்பெரு மான்மாவி லிருப்பது ஞானநிட்டை

பொழிப்புரை:-

தனிமையான பற்றற்ற இடத்திலே சென்றிருந்து, பொறி வழிகளிற் செல்லாது மனத்தையடக்கி, நினைப்பெனும் ஆசை வழிச் செல்லும் மூச்சுக்காற்றை அடக்கி அல்லது விடுத்து, இருந்தபடி இருந்து ஆன்ம தரிசனம் பெற்றிருப்பதே ஞானநிட்டையாகும்.

விளக்கவுரை:-

ஞானம் என்பது என்ன? அறிவு என்பது அதன் பொருள். அறிவு எத்தகையதாக இருக்க வேண்டும் என்றால் விருத்திகள் எதுவுமின்றி ஒருமித்த சிந்தனையோடுகூடிய மனத்திலிருந்து எழுவது. சிதறும் மனத்திலோ, ஆசைகளைச் சுமந்து கொண்டுள்ள மனத்திலோ ஞானம் எழ முடியாது.

ஒரு அரசனுக்கு வேதபாடங்களைக் கற்றுக்கொள்ளும் ஆசை வந்துவிட்டது. அதற்காக தன்னிடம் வந்து அரண்மனையில் உடன் இருந்து கற்பிக்கும்படி அவன் முனிவருக்குச் சொல்லி அனுப்பினான். முனிவர் காட்டில் தனது ஆசிரமத்தில் குருகுலம் நடத்திக்கொண்டிருந்தார். அதனால் அவர் தன்னை வந்து அழைத்த அமைச்சரிடம் ''நான் இங்கே பல மாணாக்கர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருக்கின்றேன். ஆகையால் அரசன் அவசியமாகக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று நினைத்தால் இங்கே வந்து இவர்களுடன் இருந்து கற்றுக்கொள்ளட்டும்.'' என்று கூறி அனுப்பிவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கேட்ட அரசனுக்குக் கோபம் வந்துவிட்டது. தானே நேரில் முனிவரிடம் போவதற்கு வந்தான்.

அரசன் வந்தபோது முனிவர் பாடம் சொல்லிக்கொண்டிருந்தார். மாணவர்கள் சுற்றிலும் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அதைக்கண்ட அரசன அந்த இடத்தின் வாயிலுக்குள் நுழைந்தான். அரசனை எதிர் கொண்டழைக்காவும், வணங்கவும் யாரும் முன்வரவில்லை. அதைக்கண்ட அரசனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று, "என்னைவந்து வணங்க வேண்டும் என்றோ, வரவேற்கவேண்டுமென்றோ உமக்குத் தோன்றவில்லையா?" என்று கேட்டாா, அதற்கு முனிவர் சாந்தமாக "குரு குலத்தில் இரண்டு பாகுபாடுகள்தான் உண்டு. ஆசிரியர் ஒருவர் கற்கவந்த மற்ற எல்லோரும் மாணவர்கள். நீங்களும் இங்கு கற்க வந்திருப்பதாக நான் கருதுகிறேன். அதனால் மற்ற மாணாக்கர் களைப்போலவே நீங்களும் நடந்துகொள்ள வேண்டும்" என்று சொன்னார். இதைக்கேட்ட அரசனின் கோபம் இன்னும் அதிக மாயிற்று "என்ன உளறுகிறீர்கள்? நீங்கள் சொல்வதைக் கேட்பதால் இவர்களுடைய மனம் பண்பட்டுவிடுமா? என்று கேட்டான். முனிவர் அமைதியாக, "நிச்சயமாக நான் கூறுவதை இவர்கள் மனம் ஒன்றிக் கேட்டால் அந்த நல்ல வாசகங்கள் அவர்களுடைய மனதை உயர்த் தும்" என்று சொன்னார். "நீங்கள் சொல்வதை நிருபித்துக் காட்ட முடியுமா? இல்லாவிட்டால் நான் உங்களுக்குத் தண்டனை கொடுப்பேன" என்று பயமுறுத்தினான் அரசன். உடனே முனிவர் இரு மாணாக்கர்களை அழைத்து "இந்த அரசன் ஒரு முட்டாள், அதனால் கல்வி பயிலும் இடத்தில் இவனுக்கு வேலையில்லை. இவனை வெளியே கழுத்தைப்பிடித்துத் தள்ளிவிட்டுவாருங்கள்" என்றார்.

அந்த மாணவர்கள், அப்படி எதுவும் செய்யவில்லை. ஆனால் அதற்குமுன்பே அரசனின் உடல் துடித்தது. கண்கள் சிவந்தன; கோபம பொங்கிற்று. உடைவாளை உருவிக்கொண்டு முனிவரை நோக்கிவந்தான். முனிவர் அமைதியாக அரசனைப் பார்த்து "உங்களை யாரும் எதுவும் செய்து விடவில்லையே? பின் உங்களுக்கு ஏன் இவ்வளவு கோபம்?" என்று கேட்டார். அரசன் கெத்தனமாகச் சிரித்து "அப்படி வேறுசெய்ப வேண்டுமா? நீர் சொன்ன வார்த்தைகள் போதாதா?" என்று கேட்டான். உடனே முனிவர் "அப்படியானால் நான் சொன்ன வார்த்தைகள் உங்கள் மனதிலுள்ள உணர்ச்சிகளை மாற்றி விட்டன. அதேபோல அந்தமாணவர்கள் மனதிலும் மாறுதலை ஏற்படுத்தி விடக்கூடும் என்று பயந்தீர்கள்ஆகவே நான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுவதைக் கேட்பது மனத்தை மாற்றக்கூடும் என்பதை ஒப்புக் கொள்கிறீர்கள் அல்லவா ? '' என்று கேட்டார். அரசன் இதைக்கேட்டு வெட்கித்தலை குனிந்து கொண்டான்.

இதிலிருந்து நாம் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். நல்ல விடயங்களை நல்லோர் சொல்லிக் கேட்பது நம்மை உயர்வடையச் செய்யும். அதேபோல எப்போதும் இனிமையாக நல்ல விஷயங்களையே பேசுவது நம்மை முன்னேறச் செய்யும். ஒரு மனிதனை உயர்த்தும் சக்தி இப்படிப்பட்ட சொல்லில் இருக்கிறது. ''நிறைமொழி மாந்தர் பெருமை நிலைத்து மறை மொழி காட்டிவிடும் '' ஆகவே நல்லோரை நாடி, நல்ல உரைகளைக் கூறுபவரிடம் சென்று கவனித்துக் கேட்பதுடன் அவற்றைப் பிறருக்குச் சொல்லவும் முற்பட வேண்டும்.

மேற்கூறிய விடயங்களைப் போதிக்கின்ற இடங்கள் வேதாந்தங்களைப் போதிக்கின்ற ஆசிரமங்களே. அதுவே அறிவாலயம். அதுவே ஞானச்சுரங்கம். அங்குதான் மனதைப் பொறி வழி செல்லவிடாது அடக்கலாம் என்று சுவாமி ஸ்ரீ சச்சிதானந்தரும் மேற்படி பாவில் வலியுறுத்துகிறார்.

''தனித்த வேதாந்த விடத்தினிற் சென்று
மனத்தினைப் பொறிவழி செல்லாதடக்கி ''

என்ற தத்துவவிசார உண்மையைப் புலப்படுத்துகிறார். அரசனுக்குத் தான் எனும் நினைப்பு மேலிட்டிருந்தது. அதனால மனது ஆசையால் நிரம்பியிருந்தது. அதனால் முனிவர் முன் பொறியிழந்து நின்றான். இறுதியில் மனக்குறை அறிந்து மனதைப் பண்படுத்தி ஆன்மாவின் பக்கம் திருப்பினான்.

''நினைப்பெனு மாயையங் காற்றை விடுத்து
வனப் பெருமான்மாடிலிருப்பது ஞான நிட்டை

அவ்வாறு ஒடுங்கிய மனமானது ஆன்மாவில் லயிக்கும் நிகழ்வே ஞான நிட்டை என்பதனை சோதனைகளின் பின்தான் ஒருவனால் அறியமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. அறியாமை அகற்றுவதில் ஞான நிட்டை

4. உடல்மன மவித்தை யாவு மசத்தெனவிட்டு
திடம்பெறு மான்மா நானெனவுணர்ந்து
கடலையொத்த மாயிருள் ஞானத்தை
படமெனக் கண்டது ஞானநிட்டை

(பொ – ரை)

உடல், மனம், அறியாமை அல்லது மாயையாவும் அசத்து அல்லது இல்லாதவை, அல்லது மயக்கம் தருபவை என உணர்ந்து. அவற்றை நீக்கிவிட்டு நிலையான ஆன்மா ஒன்றே நான் எனத்திடமாக எண்ணி உணர்ந்து, கடல் அலை போன்று அலைச்சல் தருகின்ற இந்த உலக வாழ்வு ஒரு புறக்காட்சி என்று காண்பதே ஞானநிட்டையாகும்.

(வி – ரை)

''அவித்தை'' என்பது நிரந்தரமற்றது,

அசுத்தமானது, துக்கமானது, ஆத்மாவல்லாதது முதலியவற்றை நிரந்தரமானது. சுத்தமானது, இன்பமானது ஆத்மா என்று எண்ணுவதற்கு 'அவித்தை' என்று பெயர்.

அவித்தை என்னும் சொல் அபாவம் எனப்பொருள்படும் இல்லாத பொருள் இல்லை. இருக்கும் பொருளே ஒன்றை இன்னொன்றாக பொருள் கொள்ளவைப்பது 'அத்யாஸம்'' என்பர். இந்த அத்யாஸமே அவித்தை என்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி பாடல் பிரமம்தான் உலகம் ஏனையவையாவும் கற்பிதம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். சுவாமி ஒரு நாள் நிலவொளி பரவியிருந்த வேளையில் தென்னோலையின் மெல்லிய கீற்றை நிலத்தில் போட்டுவிட்டு அவருடைய அன்பர் துரையப்பா என்பவரை நோக்கி துரையப்பா துரையப்பா இங்கே ஓடிவா'' என்று அவசரமாகக் கூப்பிட்டாராம். துரையப்பாவும் என்னவோ ஏதோவென்று அறியத் துடித்தவராய் சுவாமிகள் இருந்த இடம் நோக்கி ஓடிச்சென்றார். அப்போது சுவாமிகள் துரையப்பாவுக்கு அத்தென்னோலையைச் சுட்டிக்காட்டி அதோபார் பாம்பு என்றாராம், துரையப்பாவும் மங்கலான ஒளியில் தெரிவது பாம்புதான் என அஞ்சி சற்று விலகி நின்று கொண்டாராம். அப்போது சுவாமிகள் பெருஞ்சிரிப்புச் சிரித்து என்ன ? ஏமாந்து போனியோ ? இதைத்தான் கயிற்றரவு என்று சொல்வது. மெல்லிய இருட்டில் இந்த ஓலை பாம்புமாதிரித் தோன்றியது. அது போன்றுதான் அஞ்ஞான இருளில் அந்தப் பரம்பொருள் உடல், மனம், அறியாமை போன்ற உலகாகத் தோன்றுகிறது. உண்மையில் ஓலை, ஓலை தான், பாம்பு பொய்த்தோற்றம். அது மாயை அது போன்றே பிரமம் பிரமந்தான் உலகம் கற்பிதம்'' என்று சுவாமி விளக்க துரையப்பா மெய்தான் உருகி, கைகளைக் கூப்பியவாறு நின்றார்.

ஓலையைப் பாம்புதான் என நினைத்து வாதிடுபவர்கள் யாரெனில் மழைநீர் ஒழுக்கை ஏணியாகக் கொண்டு வானத்திற்கு ஏற முற்படுபவர்கள் எனலாம்.

ஆகவே இருப்பது ஒன்றே, அது தான் பிரமம். அது எங்குமில்லை அதனை அறிய, அதற்கான தடைகளை அகற்ற திருவருள் தியானமாகிய ஞான நிட்டையே கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. குரு உபதேசத்தில் ஞானநிட்டை

கற்பனையிறந்த நிலையான்மா வெனக்கண்டு
நற்பெருந் தன்மையே நானெனத் தெளிந்து
உம்பருமறியா மோனமே வாழ்வென
நற்பெரு மாசான் சொல்லே நல்லருள் ஞானநிட்டை

(பொ – ரை)

கற்பனைகளையும், கற்பிதங்களையும் கடந்த நிலையே ஆன்மாவின் நிலையெனக் கண்டறிந்து, அதன் நல்ல பெருந்தன்மையே நான் எனத் தெளிவு பெற்று; தேவர்களும் அறியாத சும்மா இருக்கும் திறன் பெற்று, அதுவே அழியா வாழ்வென அறிந்து அதையே வாழ்வாங்கு வாழ்தலென எண்ணி வாழும் பெருமைமிக்க நல்லாசான்களின் சொல்லே நல்ல புகலிடத்தைத் தருகின்ற ஞானநிட்டை ஆகும்.

(வி — ரை)

நல்லாசான்களின் நல்வாக்குகளைக் கேட்க நமக்குப் பிரியமில்லை. அந்தளவிற்கு புற இருளாகிய உலகியலிலும், அக இருளாகிய ஆணவத்திலும் நாம் மூழ்கி வாழ்கிறோம். வளர்ந்து வரும் விஞ்ஞானத்தாலும், தேய்ந்து செல்லும் மெய்ஞானத்தாலும் இறுதியில் விஞ்சி நிற்கப்போவது இருளே. ஊமன்கண்போல அனைவரது கண்களும் மாறுகின்றன.

அக இருளாகிய ஆணவம் நீங்கப்பெறின் திருவருட் தியானத்தின் பயனாய் எய்தும் ஆனந்தத்தேனை அனைவரும் பருகலாம். அவ்வக இருளகற்ற நல்லோர் இணக்கமும், அவர் தம் வாக்குமே அவசியம்.

குருஷேத்திரப்போரில் அருச்சுனன் அமர்ந்த தேரைக் கண்ணபிரான் சாரதியாக இருந்து ஓட்டிச்சென்றான். கிருஷ்ணபகவானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குச் சாரதியாக வந்து சேவை செய்கிறார் என்ற எண்ணத்தில் அர்ச்சுனனுக்குக் கர்வம் வந்துவிட்டது. தன்னை எஜமானாகவும், பார்த்தசாரதியைத் தனவிடம வேலை பார்ப்பவனாகவும கருதிக்கொண்டான். அதனால் எஜமானியாகிய தான் தேரிலிருந்து இறங்குவதற்கு முன் பார்த்தசாரதி இறங்கி நிற்பதே மரியாதை என்று எண்ணிக்கொண்டான். கிருஷ்ணபகவான் தனது முக்கியத்துவத்தை அருச்சுனனுக்கு உணர்த்தவேண்டும் எனறு முடிவு செய்துகொண்டார். போர்க்களத்தில் ஆசாரியர்கள பலரும், மாவீரர்கள் பலரும் எய்த அம்புகள் அருச்சுனனின் தேரைத் துளைத்தன. ஆயினும கிருஷ்ணபகவான் சாமர்த்தியமாகத் திருப்பி ஓட்டிச் சமாளித்து மாலையில் பாசறைக்குத் திருப்பி ஓட்டிவந்தார். அங்கே வந்து நின்றதும் கிருஷ்ணரே முதலில் இறங்க வேண்டும் என்றும், தான் பிறகு இறங்குவதே முறை என்றும் அருச்சுனன் சொன்னான். கண்ணபிரான் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. பார்த்தனே முதலில் இறங்க வேண்டும் என்று பிடிவாதமாகக் கூறினான். கடைசியில் வேறுவழியின்றி தேரிலிருந்து அருச்சுனன் கீழே இறங்கி நின்றார். உடனே கிருஷ்ணபகவான் தேரிலிருந்து கீழே குதித்தார். மறு கணமே தேர் தீப்பற்றி எரிந்தது.

"கண்ணா! ஏன் இப்படி நடந்தது" என்று வியப்புடன் கேட்டான் அருச்சுனன். "பார்த்தா உனக்கு நான் துணை நின்றேன். அதனால் நீ காப்பாற்றப்பட்டாய். தேரில் பாய்ந்திருந்த அஸ்த்திரங்கள் அக்கினியின் வேகம் கொண்டவை. ஆயினும் நான் தேரில் அமர்ந்திருந்தவரை அவற்றால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் இறங்கியதும அவற்றின் வேகத்தில் தேர் தீப்பற்றிக்கொண்டது. நினைத்துப்பார் நான் முன்னால் இறங்கி நின்று பின்னால் நீ இறங்கியிருந்தால் என்ன நடந்திருக்கும்? உனக்கு ஆற்றல் இருந்திருக்கலாம். ஆனால் தெய்வத்தின் துணையைக் கடைசிவரை கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உனக்கு வெற்றி கிடைக்கும்" என்று கூறி அருளினார் கிருஷ்ணபரமாத்மா. இறைவன் நமக்காக விதிக்கும் ஒவ்வொரு கட்டளைகளுக்கும் எத்தனையோ அர்த்தம் உண்டு. அவை நமக்கு விளங்காமல் இருப்பதற்குக் காரணம் நம்மை அநாதியாகப் பீடித்த ஆணவம். அதைப்போக்க பேராசான்களினுடைய வாக்கைக் கேட்டு இருள் அகன்று ஆனந்தமடைவதும் ஞானநிட்டையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. மனம் லயிக்கும் இடம் அறிய ஞான நிட்டை

பார்க்கின்ற வுலகை ஆய்ந்திடப் பொருளல வென்று
ஆர்ந்தவர் வாசகத்தை நம்பின பேர்களெல்லாம்
கார் முகிலொத்த வுலகினைத் தள்ளிமோன
சீர் பெறுமான்மாவில் தனிப்பது ஞானநிட்டை

(பொ — ரை)

நாம் காண்கின்ற உலகத்தோற்றம் ஆய்ந்து பார்க்கக்கூடிய பொருள் அல்ல என்று எண்ணி, நிறைவு அல்லது கூர்மை பெற்றவர்களுடைய சொல்லை நம்பினவர்களெல்லாம் கரிய முகிலைப் போன்ற உலகத்தைப் புறந்தள்ளிவிட்டு இதயக்குகையில் மனது லயமடைந்து ஆன்மாவில் தரித்தும் தனித்தும் நிற்பதே ஞான நிட்டை

(வி — ரை)

இவ்வுலகம் பலவிதங்கள் சேர்ந்து ஆக்கப்பட்டது. மனிதனிடம் மனிதப்பண்பு, தெய்வதத்துவம், விலங்குத்தன்மை, அசுரத்தன்மை எல்லாம் அடங்கியிருக்கின்றன. அந்நிலையில் புனிதமான தெய்வீகத்தை மனதிற்கொண்டு மனிதத்தன்மையாகிய நற்குணங்களை வளர்த்துக் கொள்ளாமல் வெறும் விலங்குத் தன்மையை மட்டும் வெளிப்படுத்தி மனிதன் விபரீதமான வாழ்க்கை நடத்துகிறான். பலர் தம்மை உடலுணர்வு கொண்டவர்கள் என்று மட்டும் நினைக்கிறார்கள். மனித உடல் எந்தக்கணத்திலும் நீர்க்குமிழிபோல உடைந்து போகவல்லது என்பதை மனிதன் உணருவதில்லை. 'உடலே நான்' என்று நினைக்கிறான். உடல் பஞ்ச பூதங்களால் ஆனது. அது ஒரு நாள் அழிந்தே போகும். உள்ளிருப்பவன் என்றும் அழியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன். உள்ளிப்பவனுக்கு பிறப்போ இறப்போ அல்லது வேறு எந்த வகைப்பிணைப்போ இருப்பதில்லை. தேகியே தேவதேவன் அவன் உடலல்ல என்று உணரவேண்டும்.

மேற்படி உணர்வைப் பெறுவதற்கு இரண்டு முக்கியமான அடிப்படைகள் தேவை. முதலாவது மனதைப் பண்படுத்துவதற்குரிய அறிவை அமைத்துக்கொள்வது. இரண்டாவது அந்த அறிவு பயன்படுத்தும் படியான சூழ்நிலையை அமைத்துக் கொண்டு வாழ்வது. இதில் முதலாவது பகுதிக்கு மட்டுமே நாம் படித்தும், கற்றும் தெரிந்துகொள்ள நூல்கள் உதவும்: அத்துடன் நிறுத்தி விட்டால் இரண்டாவது பகுதியில் நமக்குக் கிடைக்கக்கூடிய பலன் கிடைக்காமல் போய்விடும். சிலந்தி மிகவும் சிரமப்பட்டு அழகானதும், அமைப்பானதுமான வலையைப் பின்னுகின்றது. ஆனால் வலை மட்டுமிருந்தால் அதன் பசி ஆறி விடுமா? இதில் பூச்சிகள் வந்து சிக்கினால்தானே அதற்கு உணவு கிடைக்கும்.

டாக்டர் உடல் நலம் இல்லாதவருக்கு மருந்தைக் கொடுக்கிறார். ஆனால் அத்துடன் நிறுத்திவிடுவதில்லை. ''நல்ல காற்றும் வானிலையும் உள்ள ஆரோக்கியத்தை அளிக்கக்கூடிய இடம் ஒன்றுக்குப் போய் கொஞ்ச நாள்கள் ஓய்வெடு. அந்தச் சூழ்நிலை உன்னைக் குணப்படுத்தும் என்கிறார். அதாவது மருந்து உடலில் வேலை செய்கிறது. சூழ்நிலை உள்ளத்தைக் குணப்படுத்துகிறது. உடலும் உள்ளமும் சமநிலை பெறுதலே சுகநிலையென்பது பதஞ்சலி சூத்திரம் பேசுகிறது. நிலத்தை உழுதால் மட்டும் போதாது. அதில் நல்ல விதைகளைப் போட்டு உரமும் சேர்க்க வேண்டும்.

தத்துவங்கள் நிறைந்த வாசகங்களைப் படிப்பதும், கேட்பதும் முதற்படி மட்டுமே, அடுத்தபடி அதில் சொன்ன, கேட்டவற்றின் படி மனதைப்பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். பக்குவமான அந்த மனம்பிறருக்குப் பயன்படும்படியாகவும், அன்புடன் பழகித் தொண்டும் புரிதல் வேண்டும். அந்தநிலையிலேயே எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளை நாம் நமக்குள்ளே உணரமுடியும். தேனை அருந்த அமர்ந்துவிட்ட தேனீ அப்புறம் செடியையோ அது அளித்த மலரையோ கவனிப்பதில்லை. அதேபோல அந்த ஆனந்தமான நிலையை அடைந்து ஒன்றிவிட நாமும் ஞானநிட்டையைப் பருகுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. மாயை அகற்றுவதில் ஞான நிட்டை

எங்குமாம் பிரமந்தன்னி லெழும்பிய மனதைவிட்டுப்
பொங்கிய ஞானத்தாலே யவித்தையை நீக்கித்
தங்கியே நின்று தனிப்பெரும் இன்பத்தாலே
தங்கி நிற்பது நல்லருள் ஞானநிட்டை.

(பொ—ரை)

எங்கும் நிறைந்துள்ள முழுமுதற்பொருளில், மேலெழும்புகிற மனதை ஈடுபடுத்தி, அதனால் சுதாகரித்துப் பொங்கும்ஞானத்தினாலே அறியாமையாகிய மாயையை நீக்கி, அதில் தரித்து நின்று பெறும் எல்லையற்ற இன்பத்திலே திளைத்தல் தான் நல்ல அருளைத் தருகின்ற திருவருட்தியானம் அல்லது ஞானநிட்டையாகும்.

(வி—ரை)

இறைவன் ஏதோ ஒரு இடத்தில்தான் இருக்கிறார் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. கண்ணில் பார்வையும் காதில் கேட்கும் சக்தியும் நிறைந்துள்ளது போல சைதன்யரூபமாக மனதில் நீக்கமற நிறைந்திருக்கிறார். இந்த உலகம் முழுவதும் இறைவனின்வடிவமே. "பார்க்குமிடமெல்லாம் நந்தலாலா" என்கிறான் பாரதி.

"எங்கும் எவையும் எரியுறு நீர்போல
தங்குமவன் தானே தனி"

என்கிறது திருவருட்பயன் "எல்லா உலகமும் ஆனாய் நீயே" என்று திருமுறைகள் பொருள் தருகின்றன.

மனிதனுக்குச் சமீபத்தில் இறைவன் இருந்தாலும் அறியாமையினால் அவரை எங்கும் தேடிக் கொண்டிருக்கிறான், ஒவ்வொரு மனிதனும் தான் சச்சிதானந்த வடிவம் எனப்புரிந்து கொள்ள வேண்டும். "அல்லவில்லை, அல்லவில்லை அல்லவில்லை அனைத்துமே தெய்வம்', என்றான் பாவுடைப் புலவோன் பாரதி. இருப்பது ஒன்றே ஒன்று தான். அந்த ஒன்றைத்தவிர வேறு எதுவும் இல்லை. அதுதான் பரப்பிரமம் 'நான் எனும் சொல் நம்மிடம் எவ்வளவு நாள் இருக்கிறதோ அதுவரை அந்தப் பரப்பிரமமே ஆதி சக்தியின் வடிவத்தில் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களையும் புரிந்து வருவதாக நமக்குக் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரமம்தான் ஆதி சக்தி

ஓர் அரசன் ஒரு யோகியிடம் எனக்கு ஒரேவார்த்தையில் ஞானம் அளிக்கவேண்டும் 'என்று கேட்டான். அதற்கு யோகி சரி, நீ ஒரேவார்த்தையில் ஞானம் பெற ஏற்பாடு செய்கிறேன் என்றார். சிறிது நேரத்துக்குள் அரசனிடம் ஒரு மாய வித்தைக்காரன் வந்து நின்றான் அவன் வந்ததும் இரணடு விரல்களைச் சுற்றிக் கொண்டே அரசனிடம் இதோ பாருங்கள், இதோ பாருங்கள் என்றான் அரசனும் ஆச்சரியத்துடன் அதைப்பார்த்தான். சிறிது நேரம் சென்றதும் இரண்டு விரல்கள் ஒருவிரலாக மாறின. மாயவித்தைக்காரன் அந்த ஒரு விரலைச் சுற்றியபடியே "அரசே" இதோபாருங்கள், இதோபாருங்கள் "என்றான் இதன பொருள் பிரமமும் ஆதி சகதியும் முதலில் இரண்டாகத் தோன்றுகின்றன ஆனால் பிரமஞானம் ஏற்பட்ட பிறகு இரண்டு இருப்பதில்லை, ஒன்றே ஒன்றுதான் இறைவன் இரண்டல்ல ஒன்று என்பது தான். அதை உணரும் பாதையைக் காட்டுவதே ஞானநிட்டையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. உபநிடத மகாவாக்கியத்தில் ஞான நிட்டை

நானதுவென நாளுமகம் பிரமாஸ் மியாவே
தேனென ருசிக்குஞ் ஞான வாழ்வினிற் பொருந்தி
கானல் நீரொத்த சகத்தினை நீக்கிக் கண்டு
ஆனந்தமாக விருப்பது ஞானநிட்டை

(பொ – ரை)

நான் தான் அது என்று எப்போதும் நினைக்கின்ற பரிபூரண பிரம நினைவாலே; தேன் போன்று சுவைக்கின்ற ஞானவாழ்வில் பொருந்தி நின்று, கானல் நீர் போன்ற பொய்யான இவ்வுலக இன்பங்களைத் துறந்து, அப்பொருளைக் கண்டு பேரின்பநிலையிலிருப்பதுதான் ஞானநிட்டையாகும்.

(வி – ரை)

பிரமத்திற்கு அடுத்தானது "அஹம்" ஆகும். முதலில் உருவானது அஹம் என்பதாகும். ஆகையால் கடவுளின் பெயர் 'அஹம்' எனப்படுகிறது. ஆகையால் மனிதனின் நிரந்தரமான பெயரும் 'நான' என்பதாகும். படைப்பு என்பது கடவுள் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதாகும். ஆகையால் உலகில் உள்ள சீவராசிகள் அனைத்தும் கடவுளின் பிரதிபிம்பமேயாவார். மனிதன் கடவுளின் சிருஷ்டிக்கும் திறமையை வெளிப்படுத்துகிறான். மனிதன், கடவுள் இவர்களின் ஒருமைத்தன்மை 'நான்' என்பதில் வெளிப்படுகிறது. ஆகையால் இந்த 'நான் என்பது என்ன என்று விசாரித்து அறிய வேண்டும்.

உலகத்து ஆசைகள் நான் என்பதை மறைக்கச் செய்து அதன் உண்மையான இயல்பை அறிவதில் இடைஞ்சல் செய்கின்றன சூரியன் உதவியால் உருவாகும் மேகங்கள் சூரியனையே மறைக்கின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் அதைப் பாக்கவல்லவர்? சூரியன் இருப்பது உண்மையே எனக் கொண்டு அம்மேகங்கள் விலகும் போது சூரியனைப் பார்ப்பவர்களே சூரியனைக் காண வல்லவர்கள். நெருப்பானது அதனிடமிருந்து உருவான சாம்பரால் மூடப்பட்டிருக்கிறது. அதனைக் காண சாம்பரை ஊதி விலக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர், சுவாமி ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரை "தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா? அவரை எனக்குக் காட்ட முடியுமா?" என்று கேட்ட போது இராமகிருஷ்ணர் அவருக்கு இறைவனைக் கண்ட உணர்வை ஏற்படுத்தினார் என்று சொல்வார்கள். இந்த வரலாற்றைப் படித்துவிட்டுப் பலர் ரமணரிடம் சென்று அவ்வாறே கேட்டார்கள். அதற்கு ரமணர் கூறியதாவது "முதலில்' தன்னையே ஒருவன் எதிரே வைத்துப் பார்க்கவேண்டும். 'நான் யார் என்று கேட்டுக் கொண்டு தன்னையே காண முயலவேண்டும். அதற்கு வேண்டிய மனப்பக்குவம் கிடைத்துவிட்டால் தனக்கும் மூலமாக உள்ள கடவுளைக் காணமுடியும். நான் என்ற அகந்தைதான் நமக்கும் கடவுளுக்கும் இடையே இருக்கிறது. அது மறைந்து விட்டால் அங்கே எஞ்சியுள்ள நிஜசொரூபமே கடவுள். அவருக்கு அயலான பொருள் உலகில் எதுவுமேயில்லை. பேதம் அற்றும் இல்லாத அகண்ட ஆத்மானுபூதியடைய ஞான நிட்டையைக் கைக்கொண்டும் கடவுளைக் காணலாம்.

'அஹம்பிரம்மாஸ்மி' என்னும் உபநிடத மகாவாக்கியத்திற்கு பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா விளக்கம் தருகையில் அஹம் 'பிரம்மா' அஸ்மி என்ற மூன்று சொற்கள் உள்ளன. அஹம் என்பது பரிபூரணத்துவச் சூழ்நிலை இவற்றால் தனித்தன்மை மாறாததாகும். அஹம் என்பதற்கு இன்னுமொரு பொருள் சாட்சியாகும். எதற்கு சாட்சி? எல்லாவற்றிற்கும் சாட்சி அதுவே. நடந்த அனைத்துக்கும், நடக்கின்ற அனைத்துக்கும், நடக்கப் போகும் அனைத்துக்கும் சாட்சி அதுவே. ஆனால் அவற்றால் பாதிக்கப்படுவதில்லை. பிரம்மா என்றால் பஞ்சபூதங்கள் அனைத்திற்கும் ஆதாரமாகும். இரண்டுக்குமிடையே வேறுபாடு எதுவுமில்லை, இவை பிரிக்க இயலாதவை, ஒன்றையொன்று சார்ந்தவை, வியாபக சக்தி (எங்கும் பரவியுள்ள) அஹம் தத்துவத்திலும். உள்ளது. அஹம் என்னும் சாட்சித்தன்மை பஞ்சபூதங்களிலும் உள்ளது. இரண்டுக்கும் இரண்டு தன்மைகள் உண்டு. ஆகவே இவை வேறல்ல, இரண்டும் ஒன்றே; என்று உணர்த்தி இணைக்கும் சொல்லே 'அஸ்மி' என்பது. இதுவே அஹம்பிரம்மாஸ்மி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சுவைபடக் கூறிய கதையும் உபநிடத மகா வாக்கியத்தை தெளிவுபட வைப்பதால் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருந்தும். பசுக்கன்று 'அம்பா, அம்பா' (நான்) என்பதால்தான் அதற்கு இவ்வளவு கஷ்டம் நாள் முழுவதும் ஏர் உழவேண்டியிருக்கிறது. வெயிலிலும், மழையிலும் அது உழைக்கவேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் அதைக் கசாப்புக்கடைக்காரன் வெட்டி விடுகிறான். அதன்பிறகும் அதன் கஷ்டத்திற்கு முடிவில்லை, தோற் தொழிலாழி அதனுடைய தோலைக் கொண்டு செருப்புத் தைக்கிறான். கடைசியில் அதனுடைய நரம்பைக் கொண்டு பஞ்சடிக்கும்நாண் தயாரிக்கின்றார். பஞ்சடிப்பவன் கையில் இது 'துஹீ, துஹூ' (நீ,நீ) என்கிறது. அப்பொழுதுதான் அதனுடைய துன்பங்கள் முடிகின்றன. ஜீவன் 'நான அல்ல, நான் அல்ல, நான் ஒன்றுமே இல்லை. ஏ இறைவா, ந கர்த்கா; நான் அடிமை, நீ ஆண்டான்' என்று சொல்லும்போது தான் விடுதலை கிட்டுகிறது. அப்பொழுதுதான் முக்திகிடைக்கிறது. இதுவரை கானல்நீரைப் பருகியபின்தான் தேன் போன்று ருசிக்கின்ற ஞானவாழ்வில் பொருந்திநிற்கும் ஞானநிட்டை கைகூடும்.

ஸ்ரீசச்சிதானந்த சுவாமியின் மேலுள்ள பாடலை விபரிக்குமாப் போல அவர் வாழ்வில் நடந்ததைக் குறிப்பிடுவது இந் நூலிற்கு மேலும் மெருகூட்டும் என நினைக்கிறேன்.

ஒருநாள் சுவாமிகள் தோட்ட வெளியொன்றினூடாகச் சென்று கொண்டிருந்தார். அவருக்கோ கடும்பசி. அண்மையில் வீடுகளும் தென்படவில்லை. தோட்டத்தின் வழியே சென்றவருக்கு ஒரு தோட்டத்தில் அதிகமான வெள்ளரிப்பழங்கள் கிடப்பது கண்ணுக்குப் புலனாயிற்று. அப்பழங்களிலொன்றைப் பிடுங்கியெடுத்து அதனை உண்ண முயற்சிக்கும் வேளையில் தோட்டக்காரன் கண்டுவிட்டான்.

ஓடிவந்து அவரிடமிருந்த வெள்ளரிக்காயைப் பறித்துக் கொண்டதுடன் அவனை ஒரு முடன் என எண்ணி ஒரு அடியும் கொடுத்தான். பூமித்தாய் ஆக்கித்தந்த அந்த அற்ப உணவைக்கூடப் பசித்து வந்த ஒரு பரதேசிக்குக் கொடுத்து மகிழ அந்த தோட்டக்காரனுக்கு மனம் வரவில்லை. பசியின் காரணமாகத்தான் அவர் அதனைப் பிடுங்கி எடுத்தாரேயன்றி அதனைக் களவாடிச்சென்று விற்பதற்கல்ல. இந்த உண்மையை அந்த வேளாளர் உணர்ந்து கொள்ளவில்லை. வேளாளனென்பான் விருந்திருக்க உண்ணாதவன், இது அவனுக்குப் பொருத்தமா? ஆணவத்தால் எழுந்த கோபம் அத்தோட்டக்காரனின் கண்களை மறைத்துவிட்டது. நல்லது கெட்டதை உணரமுடியாமல் எனது வெள்ளரிக்காயைப்பிடுங்க நீ யார் என்ற திமிரில் அடித்திருப்பான் போலும்! அடித்தது மாத்திரமல்ல ஊர்சுற்றிவிட்டு களவெடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் வந்து விட்டாயோ? என்று ஏசவும் தொடங்கினான். இந்தச் சம்பவத்தை அருகிலுள்ள தோட்டக்காரன் கண்டுவிட்டான், அத்தோட்டக்காரன் சுவாமிகளை நன்கு அறிந்தவன். அவர் ஓடோடி வந்து முன்னைய தோட்டக்காரன் சுவாமிகளை அடிப்பதையும், ஏசுவதையும் தடுத்ததுடன் அவனுக்கு ஒரு அடியும் கொடுத்து ''பாவம், பசிக்கு எண்டு ஒரு காய் எடுத்தால் யாரெண்டு பாராமல் அடிக்கிறதே'' என்று கூறிவிட்டு சுவாமிகளை வாருங்கள் என்று தன்னுடன் கூட்டிச்சென்றார். அவர் பசிதீர ஐந்தாறு தோசைகளும், தேநீரும் கொடுத்து உபசரித்தார். அவரும் களைதீர்த்தார். பின்னர் அந்த அன்பர் சுவாமிகளை நோக்கி ''மெய்யே சுவாமி, நான் செய்தது சரியோ? அவன் செய்தது சரியோ?'' என வினாவினார், சுவாமிகளும் சிறுநகை செய்து நீ செய்தது உனக்குச்சரி அவன் செய்தது அவனுக்குச்சரி. ஆனால் நீங்கள் இரண்டுபேருமே எனக்கு ஒன்றும் செய்யவில்லை (இங்கே அவர் எனக்கு என்பது தனது ஆன்மாவை எனக) 'நீ தேகத்துக்கு உணவு கொடுத்தாய் அவன் தேகத்துக்கு அடிகொடுத்தான். ஆனால் நானோ தேகமன உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவன். ஆன்மாவாகிய என்னைத் தொடவோ அழிக்கவோ எராலும் முடியாது'' என்று கூறிச் சிரித்தார். மனத்துக்கண் மாசிலராக இருந்த தவசிரேட்டர் வேறென்ன கூறுவார்?

''வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை யில''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. ஆப்த வாக்கியத்தில் ஞான நிட்டை

உலகுயிர் மாய்கையாவும் பரத்தினிற் கற்பனை
அலைவுறு மனத்தை யடக்கி ஞானசிற்பர
நலம்பெறு மான்மாவில் சாந்தியே கண்டு
நிலைபெற வுணர்ந்திருப்பது ஞானநிட்டை.

(பொ-ரை)

உலகம், உயிர், மாயை எல்லாமே பரம்பொருளின் கற்பிதமாகும். அங்கலாய்க்கின்ற மனதையடக்கி இறைவனின் திருவருள் நலம் பெறும் ஆன்ம தரிசனத்தில் அமைதியையும் சாந்தியையும் கண்டு நிலை பெற்றுய்யும் வகையை உணர்த்தியிருப்பது ஞானநிட்டையாகும்.

(வி-ரை)

பகுத்தறிவு தாவரத்தைப் போன்றது. பகலில் தாவரம் அதிக பிராண வாயுவை வெளிவிடும். அப்போதுதான் அதன்கீழ் தங்கலாம். இரவில் அது கரியமில வாயுவை அதிகமாக வெளிவிடும். அப்போது அதன்கீழ் வருவது உதவாது. பகுத்தறிவின் நிழலில் எப்போதுமே உறங்குவது நல்லதன்று. பகற் பொழுதைப்போல, பிரத்தியட்ச உலகநடைமுறைகள் எப்போது வெளிச்சமாக பிரகாசிக்கின்றனவோ அப்போது மட்டுமே பகுத்தறிவை நாங்கள் பிரத்தியட்சமாகப் புலப்படாத ஓர் உலகுக்குச் செல்லும் போது அதை விலக்கிவிடவேண்டும். பகுத்தறிவு முக்கியமாக பகுத்தறிய வேண்டிய உண்மை. அதனால் எல்லாவற்றையுமே பகுத்துப்பார்த்துவிட முடியாது. தன்னுடைய ஆணைக்கும் ஓர் எல்லையுண்டு என்ற உண்மைகள் வாழ்க்கையில் சுருதியும், லயமும் அன்பு, அழகு இவ்விரண்டையும் விளங்க வைக்க இயலாத பகுத்தறிவை அளவுக்குமீறி நம்பக்கூடாது. எங்கோ ஒரு ஆய்வுகூடத்தில் ஒரு விஞ்ஞானிகூடப் பொருளைக் கொண்டு சோதனை நடாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது முடிவை வெளிவிட்டால் உடனே அவற்றை நாம் ஒப்புக் கொண்டுவிடுகிறோம். அந்தச் சோதனைகளை நாம் நடாத்திப் பார்க்கவேண்டும் என்று எண்ணுவதில்லை. ஆனால் தம்மை ஆய்வு கூடமாகவும் தாமே சோதனைப் பொருளாகக் கொண்டு நம்முடைய ஞானச்செல்வர்கள் புரிந்த சாதனை முடிவுகளை ஏற்கமட்டும் மறுக்கிறோம். விஞ்ஞானிகளில் ஒருவர் கண்ட முடிவு தவறு என்று இன்னொரு காலத்தில் வரும் விஞ்ஞானி கூறுவார். ஆனால் பல்லாயிரம் ஆண்டுகளாக எல்லா ஞானிகளும் கண்ட முடிவு மட்டும் ஒன்றாகவே இருக்கிறது.

அம்முடிவுதான் உலகம், உயிர், மாயை எல்லாமே பரம்பொருளின் கற்பிதம் என்றும் மனதை அடக்கி ஞானிகள் புரிந்தசாதனைப்படி ஞானநிட்டையனுஷ்டிக்கின் ஆன்ம தரிசனத்தில் சாந்தியும், அமைதியும் கண்டு நிலைபெற்றுய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. அத்வைதத்தில் ஞானநிட்டை

எங்குமே பிரமமாகும் யாவுமே பிரமமாகும்
தங்கிய பொருள்கள் யாவும் பிரமமேயன்றி
யிங்கொரு பொருளுமில்லை எல்லாமே பிரமமென்று
எங்குமாயிருக்கும் ஞானப்பெருவெளி கலத்தல்
ஞானநிட்டை

(பொ — ரை)

எல்லாம் பரம்பொருள் மயம். யாவும் பரம்பொருளாக வியாபித்திருக்கிறது. பொருந்தி நிற்கின்ற சகல பொருள்களிலும் அதுவே ஊடுநிற்கிறது. அதுவன்றி இங்கு வேறொரு பொருளுமில்லை என்று சிந்தையிற் கொண்டு அதன் உயர்ந்த எல்லையற்ற ஞானப்பெருவெளியில் கலந்து மேலான நிலையடைதல் ஞானநிட்டை யாகும்.

(வி — ரை)

அருவக் கடவுளும் உண்மை. உருவக் கடவுளும் உண்மை. சச்சிதானந்த பிரம்மம் எனப்பட்டது அஃது ஓர் எல்லையற்ற சமுத்திரம். எங்கும் எல்லையற்ற நீர்ப்பரப்பு, மேல், கீழ், இடம் வலம் என்றில்லாமல் எங்கும் ஒரே தண்ணீர் மயம். தண்ணீர் அசைவற்றிருப்பது காரணப்பிரம்மம் தண்ணீர் அலைகளால் அசையும்போது அது செயற்படுகிறது. இந்தச் செயல்தான் படைத்தல், காத்தல், அழித்தல்

''காக்கை குருவி எங்கள் ஜாதி... —
நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை''

''வானில் பறக்கின்ற புள்ளெல்லாம் நான்
மண்ணில் திரியும் விலங்கெல்லாம் நான் — பாரதி

எல்லா உயிர்களிடத்திலும் நானே இருக்கிறேன். — கீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பிரபஞ்சமாக. பிரபஞ்சத்தினூடே வியாபித்திருப்பது பிரமமன்றி வேறெதுவும் இல்லை. பிரபஞ்சமோ பஞ்சபூதமயமானது. உடலும் அப்பூதங்களின் சேர்க்கையினால் ஆனது. ஒருவரின் உடலில் இருக்கும் பஞ்சபூதங்களுக்கும் இன்னொருவருடைய உடலில் இருக்கும் பஞ்சபூதங்களுக்கும் எந்தப்பாகுபாடுமில்லை. அதேபோல் பஞ்சகோசங்களும் எல்லோருடைய உடலிலும் ஒன்றாகவே இருக்கிறது. இதேபோல் எல்லோருடைய உடலிலும் பஞ்சபிராணன்களும் ஒன்றாகவே இருக்கின்றன. பஞ்சபூதங்கள், பஞ்சகோசங்கள், பஞ்சபிராணன்கள் ஆகியவற்றின் இருப்பில் யாதொரு வித்தியாசமோ வேறுபாடோ இல்லை. இவ்வேற்றுமையற்ற தன்மையை உணருகையில் ஒருமைத்தன்மையை உணர்வோம். ஆகவே யாவுமே பிரமமேயன்றி இங்கொரு பொருளுமில்லை என்று உணர்ந்து கொள்ள ஞானநிட்டையாகிய திருவருட் தியானத்தை அனைவரும் கடைப்பிடிப்போமாக.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாவுதுணை நூல்கள்


1. ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் – வித்துவான் க. காமாட்சிசுந்தரம்
சிவா பிறிண்டர்ஸ், கைதடி 1993

2. சனாதனசாரதி – ஸ்ரீ பகவான் சத்திய சாயிபாபா
''சுந்தரம்'' சக்தி பிறிண்டர்ஸ் & என்டர் பிரைஸ் - சென்னை
October 1995, — September 1995

3. ஞானபூமி – மணியன்
திரு. வி. க. தொழில்பேட்டை ஏப்பரல், மே, ஜூன் 1992

4. திருக்குறள் – உரை டாக்டர் மு. வரதராசன்
திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூல்பதிப்புக் கழகம், ஜூலை 1997

5. முப்பொருள் உண்மை விளக்கம் – மு. இளையதம்பி B. A.
ஈகிள் பிரிண்டிங் வேக்ஸ் லிமிட்டெட் - யாழ்ப்பாணம் 1988

6. பாரதிபாடல்
பூம்புகார் பிரசுரம் - சென்னை 1992

7. சுவாமி இராமகிருஷ்ணர் வாழ்க்கைச் சரிதம்
சுவாமி தன்மயானந்தர்
ஸ்ரீராமகிருஷ்ணர்மடம் - சென்னை 1982

8. இராஜயோகம் – சுவாமி விவேகானந்தர்
ஸ்ரீராமகிருஷ்ணர்மடம் - சென்னை 1982

9. பதஞ்சலி யோகசூத்திரம் – ஸ்வாமி
ஸ்ரீ இந்து பப்ளிக்கேசன்ஸ் - சென்னை 1993

10. கீதைப் பேருரைகள் – வினோபாபாவே
காந்திய இலக்கியச் சங்கம் - சென்னை

11. கீதாவாகினி – டாக்டர் P. K. சுந்தரம்
அபிராம் அச்சகம் - அல்வாய் 1990

12. பகவத்கீதை – சித்பவானந்தர்

13. தமிழ் வேதத்திரட்டு - குலபதி ஆறுமுகம் கந்தையா J. P
சிவா பிறிண்டர்ஸ் - கைதடி 1994

14. மேல் நாட்டுத்தரிசன வரலாற்றுச் சுருக்கம்
சி. கதிரவேற்பிள்ளை B. A.
ஈழகேசரிப்பொன்னையா வெளியீட்டு மன்றம் 1958

15. சச்சிதானந்தம் – ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரமம் கைதடி.
தியானநிலையத் திறப்புவிழா சிறப்பிதழ் 1998




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org